15th March 1960]

Sri K. ANBAZHAGAN : இதில் பாதிக்கப்பட்ட எல்லாக் குடும்பங்களுக்கும் குடியிருப்பு வசதி செய்துதர அரசாங்கம் முன் வந்துள்ளதா? அவர்களுக்கு அளிக்கப்படும் தொகை குடியிருப்பு மனை கட்டிக்கொள்வதற்குப் போதாததாக இருக்கிறது என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அந்தக் குறையைப் போக்க அரசாங்கம் முன் வருமா?

The Hon. Sri M. A. MANICKAVELU : இப்போது இதற்காக 80,000 ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. கூரை வீடுகளாக இல்லாத வீடுகளாகக் கட்டினால்தான், அதாவது ஓட்டு வீடுகளாகவோ அல்லது வேறு விதமான நல்ல வீடுகளாகவோ கட்டினால்தான் இந்த மாதிரியான தீ விபத்துகள் ஏற்படாது. இந்தத் திட்டத்திற்கான பணம் மத்திய சர்க்காரிலிருந்து வராது. எனவே சென்னை அரசாங்கமே இதற்கான செலவை ஏற்றுக் கொண்டு இத்திட்டத்தை நிறைவேற்ற விருக்கிறது.

Sri N. R. THIAGARAJAN : ஜெர்மனியில் Reich stagல் தீ விபத்து ஏற்பட்டதே, அதைப் போலவே இங்கும் ஏற்பட்டதா? 9.00 a.m.

The Hon. Sri M. A. MANICKAVELU : Reich stag சமாசாரம் எனக்குத் தெரியாது. இங்கு நடந்த விபத்து சமையல் பண்ணும் போது அஜாக்கிரத்தையாக இருந்தால் ஏற்பட்டது.

Agricultural development in Thanjavur

*377 Q.—Sri A. VEDARATHNAM : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை ஜில்லாவில், போர்டு பவுண்டேஷன் மூலம் (Ford Foundation) விவசாய அபிவிருத்தி வேலை எப்போது துவங்கும்?

(ஆ) விவசாயத் துறையில் இத்திட்டத்தின் மூலம் என்னென்ன வேலைகள் மேற்கொள்ளப்படும்?

(இ) நீர்ப்பாசனம் இல்லாத இடங்களுக்குத் தண்ணீர் வசதி இருந்தால் பாசன வசதி செய்து கொடுக்கும் திட்டங்கள் மேற் கொள்ளப்படுமா?

(ஈ) இந்த திட்டத்தில் சர்க்கார் பங்கு என்ன, மக்கள் பங்கு என்ன?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) to (*d*) The Government of India have sent only a draft outline of a Scheme of intensifying agricultural production in selected areas with aid from the Ford Foundation. The scheme can be implemented only after the finalised scheme which is awaited from the Government of India is received and full details are worked out. As the whole matter is still in the stage of examination, it is too early to give a precise answer to clauses (*b*) to (*d*) of the question. As regards clause (*a*), it is proposed to inaugurate the Scheme on the Tamil New Year's day (13—4—1960).

[15th March 1960

Sri A. VEDARATHNAM : இந்தத் திட்டம் அமுலுக்கு வந்தால் இதைச் செயல் முறையில் கொண்டு வரும்போது இப்போது இருக்கும் அரசாங்க உத்தியோகஸ்தர்களே அதைச செய்வார்களா ? அல்லது அமெரிக்க நிபுணர்கள் அந்த வேலையை ஏற்றுக்கொண்டு நடத்த முன் வருவார்களா?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இதை நிறைவேற்றும் பொறுப்பை நம்முடைய உத்தியோகஸ்தர்களே ஏற்றுக்கொள்ளு வார்கள். ஏதாவது நமக்கு அயல்நாட்டு நிபுணர்களின் சேவை வேண்டியிருந்தால் அதை நாம் பெற்றுக் கொள்ளலாம்.

Sri S. NAGARAJA MONIGAR : இவ்வளவு முக்கியமான ஒரு திட்டத்தை இந்த மாகாணத்தில் ஒரு இடத்தில் ஆரம்பிப்பதைவிட இன்னும் சிறியவையாக ஆக்கி தாலுகா அளவில் ஆரம்பிக்க ஏற்பாடுகள் செய்யப்படுமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : புதிய ஒரு திட்டம் சீராக நிறைவேற்றப்பட வேண்டுமென்றால் ஒரு இடத்தில் நிறைவேற்றிப் பார்த்து, அது எவ்வாறு பலன் அளிக்கிறது என்று பார்த்து, பிறகு பல இடங்களில் பரவலாக ஆரம்பிக்கலாம்.

Hindu Marriage Act

* 378 *Q.*—Sri S. LAZAR : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the Government have framed necessary rules and regulations under the ' Hindu Marriage Act, 1955 ' enabling parties to a marriage under the said Act to get their marriage registered; and

(*b*) if not, the reasons therefor?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) No Sir.

(*b*) The Government do not consider that there is any need to frame rules under the Hindu Marriage Act, 1955.

Sri S. LAZAR : ஸார், ஸ்பெஷல் மேரேஜ் ஆக்டில் விதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. ஆனால் இந்தச் சட்டத்தில் விதிகள் செய்யப்படவில்லை. சாதாரணமாக நடக்கக்கூடிய ஒவ்வொரு கல்யாணத்தையும் இந்தச் சட்டத்தின் கீழ் பதிவுசெய்ய முடியும் என்று சட்டம் சொல்லுகிறது. ஆனால் நடைமுறையில் அதிகாரங்களோ, விதிகளோ ஏற்படுத்தாத காரணத்தால் ஒரு திருமணத்தைக்கூட ரிஜிஸ்டர் செய்யமுடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அரசாங்கம் இதற்கான விதிகளை ஏற்படுத்த முன் வருமா?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : திருமணங்களைப் பதிவு செய்ய இந்த விதிகள் இல்லாதது தடையாக இருக்கிற தென்று நினைக்கவில்லை. இதற்கு விதிகள் அமைப்பது என்றால், நிர்ப்பந்தமாகப் பதிவு செய்வது என்ற முடிவு ஏற்பட்டால் அதற்கு அவசியம் விதிகள் ஏற்படலாம். மேலும், இது அகில